# பழந்தமிழ் இலக்கியங்களில் உலக ஒருமைப்பாடு

# Global Unity in Ancient Tamil Literature

***முனைவர் ஆ. பூபாலன்***
முனைவர் பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம்
இந்தியக் கல்வி அமைச்சகம்)
பெரும்பாக்கம், சென்னை
தமிழ்நாடு, இந்தியா

**Dr. A. Boopalan**
*Postdoctoral Fellow*
*Central Institute of Classical Tamil*
*(An Autonomous Institution*
*Ministry of Education)*
*Government of India*
*Perumbakkam, Chennai*
*Tamil Nadu, India*

**Citation**: Boopalan, A. "Global Unity in Ancient Tamil Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 2, 2025, pp. 1-12.

## *ஆய்வுச் சுருக்கம்*

*உலக மாந்தர்கள் என்று கூறுகின்றபோது வெவ்வேறான திசைகளில், வெவ்வேறான நாடுகளில் வாழும் மக்கள் அனைவரையும் குறிக்கும். பொன் நிலத்தில் தோன்றுகிறது; மணி மலையிலே பிறக்கின்றது; பவழம் காட்டில் தோன்றுகிறது; முத்து கடலிலே பிறக்கின்றது. பிறக்கின்ற இடம் வேறு வேறு ஆயினும் அவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு மாலையாக அல்லது அணிகலனாக உருவாகும்போது அவை முத்துமாலை என்றோ, பவழமாலை என்றோ பெயர் பெறாமல் ஓர் அணிகலன் என்றே பொதுப் பெயரினைக் கொண்டு அழைக்கப்படுகின்றது. அவற்றைப் போலவே மக்கள் எவ்வூராயினும் எந்நாடாயினும் எவ்வினமாயிறும் இவ் உலக மக்கள் என்றே அழைக்கப்படுகின்றார்கள்.*

*ஒருமைப்பாடு என்பது நெஞ்சின் நிலைப்பாடாகவும், உறவின் உறுதிப்பாடாகவும் அமைவது போல உலக அளவில் அமைந்த உறவின் உறுதிப்பாடே உலக ஒருமைப்பாடாகும். உலகில் வாழும் மக்கள் இனத்தால், நாட்டால், நிறத்தால், மொழியால் வேறுபட்டவர்களாயினும் மக்கள் என்று சொல்லும் போது அனைவரும் ஒரே நிலையில் வைத்து எண்ணப்படுகின்றனர். மனிதப் பன்புகள் என்ற நிலையில் பழக்க வழங்கங்கள் உன்னும் உணவு, உடுக்கும் உடை என்பனவற்றால் வேறுபாடுகள் அமையினும் மனத்தளவில், உள்ள உணர்வில் உள்ளம் ஒன்றியவர்களாக - ஒரே தன்மை உடையவர்களாகத்தான் இருக்க முடியும்.*

*மனித இன ஒருமைப்பாட்டுணர்வுச் சிந்தனை என்பது பழங்காலந் தொட்டே நிலவிவருகின்ற ஒன்றாகும். அன்பு அனைவருக்கும் உரிய ஒத்தப்பண்பு, பொதுப்பண்பு. ஆனால் அவை வெளிப்படும் நிலைகள் பலவாகும். அது போல மக்களிடத்தில் ஒருமைப்பாட்டுச் சிந்தனையானது, உணர்வானது பல நிலைகளில் வெளிப்பட்டுள்ளது. சான்றாகப் பண்டமாற்று, கொடை போல்வனவற்றைக் கொள்ளலாம். இதனைப் பழந்தமிழ் இலக்கியங்களில் வழி அறிய முடிகின்றது.*

***கலைச்சொற்கள்:*** *ஒருமைப்பாடு, பண்பாடு, பண்டமாற்று, கொடை*

## Abstract

*When we say worldly people, we mean all the people living in different directions and countries. Gold is born in the ground; a diamond is born in the mountains; a coral is born in the forest; a pearl is born in the sea. Although the place of birth is different, when they all come together to form a garland or an ornament, they are not called a pearl garland or a coral garland, but are called an ornament by the general name. Similarly, people, no matter where they are, what they are, or what they are, are called the people of this world.*

*Just as unity is the position of the heart and the affirmation of relationship, global unity is the affirmation of relationship established on a global scale. Although the people living in the world are different in race, country, color, and language, when we say people, they are all considered to be on the same level. In the context of human beings, even if there are differences in habits, food, and clothing, they can only be united mentally and emotionally - having the same nature. The idea of human solidarity has existed since ancient times. Love is a common trait, a common trait for everyone. But there are many levels in which it is manifested. Similarly, the idea and feeling of solidarity among people has been manifested in many levels. Examples include barter and gift giving. This can be traced back to ancient Tamil literature.*

***Keywords****: Global Unity, Ornament, Human Solidarity*

**முன்னுரை**

*உலகம் என்பது பல்வேறு பொருள்களைத் தன்னுள் கொண்ட பல பொருள் ஒரு சொல், இச் சொல்லுக்கு நாடு, உயிர்கள், ஊர், நிலம், ஒழுக்கம், உயர்ந்தோர், மக்கட்தொகுதி, ஆகாயம், திக்கு, உயர்குணம், வழக்கம் போன்ற பொருள்கள் உண்டு. இவற்றுள் நிலம், நாடு, மக்கட்தொகுதி, உயிர்கள் என்பவை உலகம் என்பதனோடு நெருங்கிய தொடர்புடையவை. உருண்டையானது, சுற்றுவது, சுழல்வது போன்ற பொருள்களைத் தரும் 'உல்' என்ற வேர்ச் சொல்லில் இருந்து பிறந்ததுதான் உலகம் என்றச் சொல்லாகும் (நெடுஞ்செழியன், தமிழிலக்கியத்தில் உலகாய்தம், ப.15).*

**உலகம் என்னும் பொருளுடைய பிற சொற்கள்**

*உலகம் என்னும் பொருளில் உலகு, வையம், மண், வையகம், ஞாலம், மாநிலம் போன்ற சொற்கள் பயின்று வந்துள்ளன. இதனை,*

***"மன்மாறு கொண்ட மாலை வெண்குடை" (சிறு. 64)***
***"ஏழுறு ஞாலந் தன்னிற் றோன்றி" (முருகு.163)***
***"நிலமமர் வையத் தொருதா மாகி" (மது.470)***
***"வையக மலர்ந்த தொழின்முறை யொழியாது" (பதிற்.88: 1)***
***"விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலம்" (அகம்.164:3)***
***"உலகுபுகத் திறந்த வாயில்" (புறம்.234: 5)***

*என வரும் சங்க இலக்கிய அடிகள் மெய்ப்பிக்கின்றன.*

**உலகம் என்னும் உணர்வு**

*மனிதநல நாட்டம் கொண்டவர்கள் சங்கத்தமிழர்கள். மனித இன ஒருமைப்பாடு காணும் அவர்களிடம் இயல்பாக உலகம், உலக மக்கள் என்ற உலகம் பற்றிய சிந்தனைகள் அடிப்படையாக அமைந்திருந்தன. இந்த உணர்வுகள் தமிழர்களிடம் அரும்பியதற்குக் கருவியாக அமைந்தவர்கள் புலவர்கள் எனலாம். சங்கப்புலவர்கள் சிலரிடம் உலகம் என்னும் உணர்வு முளைவிட்டு இருந்ததை,*

***"வையமும்"... ... ... (புறம்.358:3)***
***"... ... உலகத்து***
***மன்பதைக் கெல்லாம்" (புறம்.356:7-8)***
***"பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்" (புறம். 358:1)***

*எனப் புறநானூறுப் பாடல்களின் வழி உய்த்துணரலாம். இதனைத் தொடர்ந்து அவ்வெண்ணம் திருக்குறளிலும் இடம்பெற்றிருப்பதை,*

***"தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து" (குறள். 68:1)***

***"வசையென்ப வையத்தார்க் கெல்லாம்" (குறள். 238:1)***

***"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்"(குறள். 294:1)***

***"மருங்குடையார் மாநிலத்து இல்" (குறள். 526:2)***

***"உலகத்தார் உண்டென்பது" (குறள். 850:1)***

*என வரும் குறளடிகளைக் கொண்டு அறியலாம்.*

*எனவே, உலகத்தை முழுமையாகத் தெரிந்து கொள்வதற்கு இயலவில்லை என்றாலும், உலகம், உலகமக்கள் என்ற உணர்வானது பழந்தமிழர்களிடம் அரும்பி இருந்ததைக் காணமுடிகின்றது.*

*சங்ககால மக்களிடம் ஒரு சிலரிடமாவது, தாம் உலகக் குடிமக்கள், உலகிற்குப் பொதுவானவர்கள் என்னும் எண்ணமானது அவர்கள் மனதில் குடி கொண்டிருந்தது. இதனை,*

***"எத்திசைச் செலினு மத்திசைச் சோறே" (புறம். 206: 13)***

***"பெரிதே உலகம் பேணுநர் பலரே" (புறம்.207:7)***

*என்னும் தொடர்கள் உறுதிப்படுத்துகின்றன. உலக நிலப்பகுதிகள் அனைத்தையும் ஒன்றாகக் கருதிய மனப்பான்மையினை உடையவர்களாக இருந்ததை,*

***"யாதும் ஊரே யாவரும் கேளிர் " (புறம்.192: 1)***

*என்றும் புறநானூற்று அடி தெளிவுச் செய்கின்றது.*

*ஆக, உலகம் என்னும் சிந்தனையானது, உணர்வானது புலவர்களிடம் மட்டுமல்லாமல் அக்கால மக்களிடமும் இருந்ததை ஊகிக்க முடிகின்றது.*

**மூவகை உலகங்கள்**

*பழந்தமிழர்கள் உலகினை மேல் உலகம், இடைநிலை உலகம், கீழ் உலகம் என மூவகைப்படுத்தினர். தேவர்கள் வாழும் உலகினை மேல் உலகம் என வழங்கினர். இதனையே தேவருலகம், வானுலகம், வானோர் உலகம், விண்ணுலகம், புத்தேலுலகம், சுவர்க்கம், தெய்வ உலகம் எனப் புலவர்கள் சுட்டிச் சென்றிருக்கின்றனர். நரகர்கள் வாழும் உலகினைக் கிழுலகம் என்பர்.*

*இடைநிலை உலகத்தைத் தாம் வாழும் உலகமாக வரையறுத்துக் கொண்டனர். இவ்வாறாக, உலகினை மூன்றாகப் பாகுபடுத்திக் காணும் போக்கினால் உலகம் முழுவதையும் ஒன்றாகக் கருதியமை தெளிவாகின்றது. இதனை,*

***"உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை"(பதிற் .70: 19)***

***"மாடோர் உறையும் உலகமும் கேட்ப"(பதிற் .70: 23)***

***"மூவகை யுலகு முகிழ்த்தன முறையே" (ஐங்.க.வா.1)***

***"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்<br>வானகமும் ஆற்ற லரிது" ( குறள். 101)***

***"புத்தே குலகத்தும் ஈண்டும் பெறலரிதே<br>ஒப்புரவின் நல்ல பிற" (குறள். 213)***

***"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு<br>இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள். 247)***

***"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்<br>வானம் நனிய துடைத்து" (குறள். 353)***

*என்னும் பாடல் அடிகளில் வரும் மூவுலகம் பொன்னுலகம், மண்ணுலகம், உயர் நிலையுலகம்,*

*மாண்டோர் உலகம், அவ்வுலகம், இவ்வுலகம், வையம், வானம், வையகம் என்றும் சொற்கள் - இவைகள், இவ்வுலகம் முழுவதையும் ஒரு சேரக் கருதும் எண்ணம் இருந்தமையைக் குறிக்கின்றன.*

**உலகம் - நிலம் என்னும் பொருளில் வழங்குதல்**

*இவ்வுலகம் முழுவதையும் சுட்டும் பெயர்களாக ஞாலம், வையம், மன், உலகு, மாநிலம், உலகம் போன்றவை நிலம், நாடு, மக்கட் தொகுதி, உயிர்கள் என்னும் பொருள்களில் சங்க இலக்கியங்களில் வழங்கப்பட்டுள்ளன.*

*இச்சொற்கள் பூமியில் ஒரு பகுதியைக் குறிப்பிடும் குறியீடுகளாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனை,*

***"மாயோன் மேய காடுறை உலகமும்***
***சேயோன் மேய மைவரை உலகமும்***
***வேந்தன் மேய தீம்புனல் உலகமும்***
***வருணன் மேய பெருமணல் உலகமும்" (தொல். 951:1-4)***

*எனப் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உலகம் என்னும் சொல் நிலம் என்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. அதாவது காடுறையுலகம், மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகம் என்னும் சொற்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலங்களையே சுட்டுகின்றன.*

***"மலர்தலை யுலகத்துத் தோன்றி" (புறம். 24:35)***
***"மலர்தலை யுலகத்து மன்றுயிர் காக்கும்" (பெரும்.32)***
***"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்***
***கவிகைக்கீழ்த் தங்கும் உலகு" (குறள்: 389)***

*எனச்சங்க இலக்கியங்களிலும் உலகம் என்பது நிலம் என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது.*

**உலகம் நாடு என்னும் பொருளில்**

*உலகம் மற்றும் அப்பொருளைக் கொண்ட வேறு சொற்கசும் நாடு என்னும் பொருளிலும் சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளன.*

*இதனை,*

***"உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக" (மது. 23 )***
***"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்இசை" (அகம்.78:15)***
***"தன்னுயிர் போலத் தழீஇ உலகத்து" (கலி.143:52)***
***"தெறல் கடுமையொடு பிறவு மிவ்வுலகத்து" (பதிற்.22:3)***
***"வேலு மின்னின் விளங்கு முலகம்" (புறம்.42: 4)***
***"இறை காக்கும் வையகம்" (குறள். 547:1)***

*என வரும் சங்கப்பாடலடிகள் மற்றும் வான்மறையும் உறுதிச் செய்கின்றன.*

**உலகம் - உயிர்கள் என்ற பொருளில்**

*உலக உயிர்கள் அனைத்தும் ஒன்று என்ற கருத்தினைக் கொண்டதாக உலகம் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன.*

***"உலக முவப்ப ஒதரும்" (நற். 237: 9)***
***"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" (திருமுரு. 1)***

***"நளியிரும் பரப்பிலிவ் வுலகுடன்றுமே". (ஐங்.409: 4)***

***"மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவீற்று" (கலி.34:1)***

***"வான்நின்று உலகம்" (குறள்.11: 1)***

***"வானோக்கி வாழும் உலகெல்லாம்" (குறள். 542:1)***

*என்ற பாடலடிகள் தெளிவுப் படுத்துகின்றன.*

*எனவே, உலகம் என்ற சொல் உலகத்தில் தோன்றிய உயிர்கள் அனைத்தையும், உலக மக்கள் இனத்தையும் குறிக்கும் வகையில் குறிக்கப்பட்டுள்ளன. அனைவரையும் ஒன்றாகக் கருதும் மனப்பான்மையினை உடையவர்களாக மக்கள் இருந்துள்ளனர் என்பதினை உணர முடிகின்றது. ஆகவே உலகம் பற்றிய உணர்வு நிலம், நாடு, மக்கட்தொகுதி, உயிர்கள் என்கின்ற பொருள்களில் அவர்களிடையே நிலவி இருந்ததை அறிய முடிகின்றது.*

**ஒருமைப்பாட்டிற்கான வழிகள்**

*ஒருமைப்பாடு என்பது தமிழர்களின் உயிரில் கலந்து உணர்வில் வெளிப்பட்ட ஒன்றாகும். ஐந்நிலங்களிலும் வெவ்வேறான தொழில் முறைகளைக் கொண்டிருந்தாலும் வேறுபாடில்லாமல், அன்பில் சிறிதும் குறைவுபடாமல் உயர்ந்த அன்பு வாழ்க்கையினை வாழ்ந்தவர்கள்.*

*நாம் மட்டும் வாழவேண்டும்; தாம் வாழ பிறரை நலியச் செய்தல் என்பது மனிதத் தன்மையன்று. எல்லோரும் வாழவேண்டும், எல்லோரும் நல்லவரே, எல்லோர் வாழ்வுக்காகவும் உழைக்க வேண்டும், எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்பதே மனிதத் தன்மையாகும். இக்கருத்தானது பண்டைத் தமிழர்களின் சிந்தனைகளில் நிறைந்திருந்தது.*
*தம்மோடு பழகியவர்கள் நட்புக்கொண்டவர்கள் நஞ்சிணை அமுதம் என்று கொடுத்தாலும் அதனை மறுக்காமல் உண்பவர்கள் தமிழர்கள். அந்தளவிற்கு மற்றவர்களின் அன்புக்குரியவர்கள்; பிறரைப் போற்றி மதிக்கின்றவர்கள். இதனை,*

***"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்***
***நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" (நற்.355:6-7)***

*என நற்றிணை நவில்கின்றது.*

*உலக ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டியவர்கள் தமிழர்கள். அதனால்தான் சங்க இலக்கியங்களைப் பாடிய சான்றோர்களும், புலவர்களும் தமிழ்நாட்டை உலகை விட்டுப் பிரிக்காமல் உலகத்தோடு சேர்த்தே பாடல்களைப் பாடினார்கள்.*

**உலக உயிர்கள் அனைத்தும் ஒன்று**

*சங்கத்தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையினை மேற்கொண்டிருந்தனர். ஆறறிவுப் படைத்த மனிதன் உலகில் தோன்றும் உயிரினங்கள் அனைத்தும் ஒன்று என எண்ணினான். உலகத்து உயிரினங்களை ஓரறிவுமுதல் ஆறறிவுவரை புலன்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாகுபடுத்தும் நிலை தொல்காப்பியர் காலத்திலேயே இருந்து வந்ததொரு மரபாகும். இவ்வேறுபாடு புலன்களின் அடிப்படையிலேயே அமைந்ததன்றி வேறு காரணம் பற்றி அமைந்ததன்று. உயிரின ஒருமைப்பாட்டின் வழி மனிதஇன ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டவர்கள் தமிழ்ப்புலவர்கள் என்பதினைச் சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன.*

***"இருங்கண் ஞாலத்து ஈண்டு தொழில் உதவி " (நற்.157 : 1)***

***"உலக முவப்ப ஓதரும்" (நற்.2379)***

***"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு" (முருகு.1)***

***"நனியிரும் பரப்பினிவ் வுலகுடனறுமே" (ஐங். 409:4)***

***"மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவீன்று" (கலி.34: 1)***

*என உலக உயிரிவங்களைக் குறிக்கும் வகையில் இவ் அடிகள் அமைந்துள்ளன. வள்ளுவரும்,*

***"வான்நின்று உலகம்" (குறள். 11:1)***

***"வானோக்கி வாழும் உலகெல்லாம்" (குறள். 542:1)***

*என்ற குறட்பாக்களில் வழி உலக உயிர்களை காண்கிறார்.*

***"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (குறள். 972:1)***

*என்னும் அவர்தம் பார்வை, உலக உயிரின் ஒருமைப்பாட்டிற்கான பார்வையாக அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.*

***"அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின் நோய்***
***தந்நோய்போல் போற்றாக் கடை" (குறள். 315)***

*என வரும் குறள், அறிவின் பயனே உலகத்து உயிர்களின் துன்பங்களைத் தன் துன்பமாகக் கருதுவதுதான் எனக்கூறும் போது ஓர் உயர்ந்த உயிரின ஒருமைப்பாட்டுக்கு - உயிரின உறவுக்குத் திருவள்ளுவப் பெருந்தகை வழிகாட்டுவதைப் புரிந்து கொள்ள முடிகின்றன.*

*எல்லோருக்கும் எல்லாம்*

*"ஒன்றே உலகம்" என்ற இந்த உணர்வுக்கு வழிகாட்டும் உயர்ந்த, உன்னதமான இலக்கியங்களாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.*

***"எல்லா உயிர்க்கும் இன்பம்" (தொல். 1169: 1)***

***"யாதும் ஊரே யாவரும் கேளிர் " (புறம். 192:1)***

*எனச் சங்கப்புலவர்களும்*

***"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"(குறள். 972: 1)***

*என வள்ளுவனாரும் வழிகாட்டுகின்றனர்.*

*மனித இன ஒருமைப்பாடு என்று கூறும்போது உலகப் பயன்கள் எல்லாரும் எல்லோருக்குமாக அமைய வேண்டும். இந்த எதிர்பார்ப்புப் புறநானூற்றுப் புலவர்களிடம் இருந்தை,*

***"எல்லோர்க்கும் ஏமம்" (புறம்.1:11)***

***"எல்லோர்க்கும் கொடு " (புறம்.163: 7)***

***"எல்லோரும் உவப்ப" (புறம்.195 : 8)***

***"எவ்வுயிர்க்கும் வாழ்க்கை" (புறம்.203: 3)***

*என்ற தொடர்கள் நிரூபித்துக்காட்டுகின்றன.*

*உலகை வாழ்விக்கும் உயிர்பண்பைப் பண்டைத் தமிழ் மக்கள் வீட்டளவில், நாட்டளவில் போற்றினர். இந்தத் தமிழ் மாட்சியை மையப்படுத்தி, கடியலூர் உருத்திரங்கண்ணனார்,*

***"புகழ்நிலைஇய மொழிவளர***
***அறம் நிலைஇய அகன்ட்டீற்***
***சோறுவாக்கிய கொழுங்கஞ்சி***
***யாறுபோலப் பரந்தொழுகி***
***ஏறுபொரச் சேறாசித்***
***தேரோடத் துகள் கெழுமி***
***நீராடிய களிறு போல***
***வேறுபட்ட வினை யோவத்து***
***வென்கோயில் மாசூட்டும்" (பட்.42-50)***

*என்கின்றார்.*

*எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்றும் தமக்குக் கிடைத்ததைப் பலரோடும் பகிர்ந்துண்ண வேண்டும் என்றும் சங்கப் புலவர்கள் பாடிச் சென்றிருக்கின்றனர். சங்ககால மக்கள் இம்முறையினையே பின்பற்றித் தங்கள் இல்வாழ்க்கையினை நடத்திச் சென்றனர் என்பதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. தனக்குக் கிடைத்த பொருள் வேறு எவ்விடத்திலும் கிடைத்தல் அரிது எனப் பெருமை பேசி அப் பொருளினைத் தான் மட்டும் வைத்துக் கொள்ளாமல் 'அனைவருக்கும் கொடுத்தருளினர் என்பதை,*

***"உரிய வெல்லாம் ஓம்பாது வீசி" (மது.146)***

*என்று மதுரைக்காஞ்சி எடுத்து மொழிகின்றது. புறநானூறும் இக் கருத்தினையே வலியுறுத்துகின்றது.*

***"வல்லா ராயிலும் வல்லுந ராயினும்***
***வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி***
***அருள வல்லை யாகுமதி யருளிலர்" (புறம்.27 : 15-17)***

*எல்லார்க்கும் எல்லாம் என்ற உணர்வானது மக்களிடத்தில் நிலை பெறுகின்ற போது உலக ஒருமைப்பாடானது அங்கு வேர் கொள்ளுகின்றது.*

**உலக உறவு**

*சங்ககாலத்து மக்களைப் பிறநாட்டு மக்களுடன் தொடர்பு கொள்ளச் செய்தது வாணிபமே ஆகும். நிலத்திடத்தவும், நீரிடத்தவும், மலையிடத்தவும் உள்ள பொருட்களை உலகத்தவர் அனைவரும் நுகரும்படிச் செய்யக் கூடியவர்கள் வணிகர்களே ஆவர். வாணிபம் உள்நாட்டு வாணிபம் வெளிநாட்டு வாணிபம் என்ற இரு வழிகளில் நடந்தது. உள்நாட்டு வாணிபம் என்னும் போது மக்கள் அனைவரும் ஒருவரோடொருவர் நன்கு பழகினர். உள்நாட்டு வாணிபத்தின் வழி மக்களுக்குள் ஏற்பட்ட ஒற்றுமை தான் அவர்களை அயல்நாட்டு வாணிபத்திற்கும் அழைத்துச் சென்றது. இதன் வழி அயலவர்களும், தமிழர்களும் உறவாடி நட்புக் கொண்டனர். இதனால் பண்பாடு, நாகரிகம் பழக்கவழங்கங்கள் யாவும் இரண்டறக் கலந்தன.*

*வாணிபத்தில் தலைச்சிறந்து விளங்கிய காரணத்தால் உலக நாடுகளுடன் தொடர்பு கொண்டு உறவு முறையைத் தமிழகம் வளர்த்துக் கொண்டது. எனவே உலக மக்களை ஒன்றுபடுத்தக் கூடிய ஒரு கருவியாக வாணிபம் விளங்கியது.*

*இதனால் யவனர், மோரியர், ஆரியர் போன்றோர் தமிழகத்தில் வந்து குடியேறினர். தமிழர்களின் நாகரிகம் பண்பாடு இவற்றையும் ஏற்றுக் கொண்டனர். ஆகையால் தமிழர்களும் அயல்நாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டனர்.*

*மேலைநாட்டவரில், குறிப்பாக யவனர், சங்ககாலத்தில் தமிழரிடையே கலந்து உறவாடி செல்வாக்கு உடையவர்களாக இருந்தவர். இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பலவிடங்களில் வருகின்றன.*

***"யவனர் நன்கலந் தந்த தன்கமழ் தேறல்***
***பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்***
***ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்***
***தாங்கினி தொழுகுமதி யோங்குவான் மாற" (புறம்.56: 18-21)***

*எனப் புறநானூற்று அடிகள் புலப்படுத்துகின்றன.*

***"புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை***
***இரைதேர் மனிச்சிர விரைசெத் தெறிந்தெனப்***

***புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது***
***கேள்வி யந்தணருங்கட னிறுத்த***
***வேள்வித் எனத் தசைஇ யவனர்***
***ஓதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட***
***வைகுறு மீனிற் பைபயத் தோன்றும்" (பெரும். 312-318)***

*எனப் பெரும்பாணாற்றுப்படை, ஆரியர், யவனர் ஆகிய இரு இனத்தவர்களும் தமிழர்களுக்கு அறிமுகமாகி இருந்தவர் என்பதைக் காட்டுகின்றது.*

*உலக மக்களுடன் தமிழர்கள் உறவு வைத்துக்கொண்டு இருந்தனர். அதனால்தான் அவர்கள் தமிழகத்தில் வந்து தங்கினர். யவனர், கிரேக்கர், வடவர், மோரியர் இவர்களுடன் தமிழ் மக்கருக்குத் தொடர்பு இருந்ததுடன் நட்பு முறையில் பழகியும் வந்தனர்.*

**அயல்நாட்டு உறவை நிறுவும் சான்றுகள்**

*தமிழிலக்கியங்களில் பெருங்கடலில் ஓடும் கலம், நாவாய் எனவும், பெருங்கப்பல்கள் வங்கம் எனவும் அழைக்கப்படுகின்றன. கலங்கள் கரைசேரத் துணையாகக் கடற்கரைப் பட்டினங்களில் கலங்கரை விளக்கம் நிறுவப்பட்டிருந்தமை பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது (பெரும்.346-351). ஏற்றுமதி இறக்குமதிக்கெனக் குவிக்கப்பட்டுள்ள பொருள்கள் அரசு பண்டகச் சாலைகளில் முத்திரையிடப்பட்ட பின்னரே வெளிச்செல்ல அனுமதிக்கப் பெற்றமைப் பற்றிப் பட்டினப்பாலை கூறுகின்றது (பட். 126-141).*

*தமிழகக் கப்பல்கள் எடுத்துச் சென்ற பொருட்களை விற்றுப் பொன்னுடன் திரும்பிவருதலை,*

***"பொன்மலிந்த விழுப்பண்டம்***
***நாடார நன்கிழிதரும்***
***ஆடியற் பெருநாவாய் (மது. 81-83)***

*என மதுரைக்காஞ்சி தெரிவிக்கின்றது.*

***"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்***
***காலின் வந்த கருங்கறி மூடையும்***
***வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்***
***குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்***
***தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்***
***கங்கை வாரியும் காவிரிப் பயனும்***
***ஈழத்துணவும் காழகத் தாக்கமும்***
***அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி***
***வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்" (பட்.185-193)***

*எனப் பட்டினப்பாலை பல நாடுகளில் இருந்தும் வந்து குவிந்துள்ள பொருட்களைக் கூறுகின்றது.*

*தமிழகத்தில் இறக்குமதியான பொருட்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது மதுவகையாகும். கிரேக்கநாடு மற்றும் ரோம் நாட்டில் இருந்து இறக்குமதியான உயர்ந்த மதுபானத்தை இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய பாண்டியன் நன்மாறன் என்பவன் அருந்தி மகிழ்ந்த செய்தியை நக்கீரனார் என்னும் புலவர்,*

***"யவனர் நன்கலந் தந்த தண்கமழ் தேறல்***
***பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்***

***ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்***
***தாங்கினி ஒழுகுமதீ’ (புறம்.56 : 18-21)***

*என்னும் புறநானூறு அடிகளின் வழி எடுத்துக் காட்டுகின்றார்.*

*எனவே பொன், மது, முத்து, மணி, சந்தனம் போன்ற பொருள்கள் எல்லாம் அயல் நாட்டு உறவை நிறுவும் சான்றுகளாக அமைகின்றன. அயல்நாட்டு பொருட்களாகிய இவைகளையெல்லாம் தமிழக மக்களும் உபயோகப்படுத்த அறிந்திருந்ததைக் காணும்போது அயலவர்களின் பண்பாடும் பழக்க வழக்கங்களும் தமிழகமக்களிடம் தஞ்சம் புகுந்து கொண்டது எனலாம். ஆகவே தமிழர்களிடம் உலகம் என்ற அளவில் ஒருமைப்பாட்டுணர்வானது ஏற்படுவதற்கு இவைகளும் காரணமாக இருந்தன என்ற முடிவுக்கு வர இயலுகின்றது.*

**மக்கள் இன ஒருமைப்பாடு**

*உலகம் என்பது ஐம்பூதங்களாகியது என்பதைக் குறிக்காமல் நிலவுலகில் வாழும் மக்களைச் சுட்டும் பான்மையினை நோக்க மக்களாய்ப் பிறந்த அனைவரும் ஒன்று என்ற உணர்வினைக் கொண்டு தமிழ்ப்புலவர்கள் பல பாடல்களைப் புனைந்து இருக்கின்றனர். தமிழினம், தமிழ்மக்கள் என்ற உணர்வுக் கொள்ளாமல் உலக மக்கள் அனைவரையும் சாதி, இன, குலம், சமயம் பாராமல் ஒன்றுபடுத்த தமிழ்ப் புலவர்கள் விழைந்ததின் விளைவாக உலகம் மற்றும் அதனோடு தொடர்புடைய மற்ற சொற்களையும் பயன்படுத்தினர்.*

***“ஈவோ ரரியவில் வுலகத்து” (புறம்.171 : 14)***
***“உலகத் தோரே பலர்மற் செல்வர்” (பதிற்.38 : 1)***
***“உலகு புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்” (முருகு.124)***
***“பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்” (கலி. 22: 3)***
***“பேருலகத்து மேஎந்தோன்றி” (மது. 133)***
***“எவ்வயில் உலகத்துந் தோன்றி அவ்வயின்” (பரி.15:15)***

*எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வள்ளுவரும் மக்களினத்தை ஒன்றுபடுத்த உலகம் என்ற சொல்லால் அழைக்கின்றார்.*

***“எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்***
***வேண்டாரை வேண்டாது உலகு” (குறள். 670)***
***“கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை***
***விடாஅர் விழையும் உலகு” (குறள். 809)***
***“அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை***
***இன்மையா வையாது உலகு!” (குறள். 841)***

*மக்கள் சமுதாயத்தின் வழிதான் மக்கள் இனத்தை ஒன்று சேர்க்க முடியும் எனக்கருதி உலக மக்களின் ஒருமைப்பாட்டினை உருவாக்கச் சான்றோர்கள் இவ்வாறு பாடியுள்ளனர் எனலாம்.*

*உலகம் என்னும் சொல் ஒழுக்கத்தில் சிறந்த பண்பில் உயர்ந்த சான்றோர்களைக் குறிக்கும்.*

***“உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே”***

*என்பதால் அதனை உணரலாம்.*

***“பேருலகத்து மேஎந் தோன்றி” (மது. 133)***
***“உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்***
***கல்லார் அறிவிலா தார்” (குறள்.140)***

*எனச் சங்க இலக்கியப் பாடலடிகளும், திருக்குறளும் மேற்கூறிய கருத்தினை மெய்ப்பிக்கின்றன.*

**உலக அமைதி பற்றியச் சிந்தனைகள்**

*உலகிலே அமைதி நிலவ வேண்டும் என்றால் தமிழக மக்கள் மட்டுமல்லாமல் இந்நிலவுலகில் தோன்றிய அனைத்து உயிர்களும், எல்லோரும் எல்லாமும் பெற்று உய்யவேண்டும். இல்லையென்றால் பேரழிவுகளும், பேரிழப்புகளும் ஏற்படும். எனவே இப்படிப்பட்ட இழி நிலையினைக் களைந்து உலகில் அமைதி நிலவ, மக்களிடையே அமைதி பற்றிய சிந்தனையைத் தூண்டுதலே சிறந்தவழி என்றெண்ணிப் பழந்தமிழ்ப் புலவர்கள் பாடல்களைப் பாடிச் சென்றிருக்கின்றனர்.*

*தமக்கென முயலாது பிறர்க்கென முயலும் பெரியோர்கள் - சான்றோர்கள் இருப்பதால் இவ்வுலகம் உளது. இல்லையெனில் இவ்வுலகம் நில்லாது என்னும் கருத்தை உள்ளடக்கி இளம்பெரும்வழுதி பாடியிருக்கிறார். "தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்கள் இந்திரர் அமிழ்தம் கிடைப்பதாயினும் அதனைத் தனித்திருந் துண்ணார்; யாரையும் வெறுக்க மாட்டார்கள்; பிறர் அஞ்சுவதஞ்சுவர்; அஞ்சி அதனைத் தீர்த்தற்கண் சோம்பார்; புகழ் பொருட்டுத் தம் உயிரையும் ஈவர்; பழியால் உலக முழுதாகும் உயர்வு வரினும் வேண்டார்: மனக்கவலையுங் கொள்ளார்; இவ்வியல்பினோடு பிறர் நலம் பேணும் பெரியோர் உளர்; அவரால் இவ்வுலகம் உளதாகின்றது" என்கின்றார்.*

***"உண்டா லம்மவிவ் வுலக மிந்திரர்***
***அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்***
***தமிய ருண்டலு மிலரே முனிவிலர்***
***துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்***
***புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்***
***உலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்***
***அன்ன மாட்சி யனைய ராகித்***
***தமக்கென முயலா நோன்றாட்***
***பிறர்க்கென முயலுந ருண்மை யானே" (புறம்.182)***

*என இப்பாடலின் வழி தமிழ்ச் சான்றோர்களின் இயல்பினைச் சுட்டிக்காட்டுகின்றார். உலகத்தில் உள்ள மக்கள் இக்குணத்தைப் பெற்று வாழ்வார்களேயானால் இவ்வுலகிலே அமைதிக்கு என்றுமே பஞ்சமில்லை.*

*உயிர்கள் பசியால் வருந்தப் பார்த்துக் கொண்டிராமல் பசித்த உயிர்களுக்குக் கொடுத்து உண்ணுவதே சிறந்த அறமாகும். இதனைத் திருவள்ளுவர்,*

***"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்***
***தொகுத்தவற்றுள் எல்லாந் தலை" (குறள். 322)***

*என்று கூறுகின்றார். இத்தகைய உயிர் அறம் உயர் அறமாகப் போற்றப்பட்டுத் தமிழ் மக்களிடம் நிலைத்தால் உலகிலே அமைதி நிலவும். தமிழர்களின் தலை சிறந்த அறமாகிய இப் பண்பு உலகத்தை ஒன்றுபடுத்தும் உயர்ந்த பண்பாகும்.*

*அமைதியாக வாழ வேண்டிய சமுதாயம் அவதிக்குள்ளாகும் போது பழங்காலப் புலவர்கள் தங்கள் பாடல்களின் வழி அதனை நீக்க வாய்ப்பேற்படுத்திக் கொண்டார்கள்.*

***"நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்***
***முறைவழிப் படூஉ மென்பது திறவோர்***

***காட்சியிற் றெளிந்தவ மாகலின் மாட்சியிற்***
***பெரியோரை வியத்தலு மிலமே***
***சிறியோரை யிகழ்த லதனினு மிலமே" (புறம்.192: 9-13)***

*என்ற பாடலின் வழிக் கணியன் பூங்குன்றனார், நீர் வழியேபோகும் மிதவை போல உயிரானது ஊழின் வழியே செல்லும் என்பது உயர்ந்தோர் பொன்மொழி. ஆகையால் நன்மையான், மிக்கவரை மதித்தலும் இலம்; சிறியோரைப் பழித்தல் அம் மதித்தலிலும் இலம் என்கிறார். இவ்வாறு ஊழின் வலிமையைக் கூறி உலகில் அமைதியை நிறுவினார்கள். திருவள்ளுவரும் பசி, நோய், பகை என இம்மூன்றும் மக்களிடத்தில் இல்லாது இருந்தால் உலகம் அமைதி நிலையினைக்காணும் என்கிறார். இதனை,*

***"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்***
***சேரா தியல்வது நாடு" (குறள். 734 )***

*என்ற குறளின் வழித் தெளியலாம்.*

*உலகில் அமைதி நிலவ மக்களிடம் உலகு தழுவிய நிலையில் அன்புணர்வு உருவாக வேண்டும். உயிரே அன்பின்வழித் தான் நிலைபெறுகின்றது (குறள்.80). அன்பின் வழி எல்லா மக்களும் ஒன்றுபடுகின்றனர். இதனால் உலகு தழுவிய அன்புணர்வு மலரும். பிறகு இதுவே உறவாகவும் மாறும். இதனை*

***"அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்***
***நண்பென்னும் நாடாச் சிறப்பு" (குறள். 74 )***

*என்னும் குறளின் வழித் தெளியலாம்.*

*இவ்வாறாக, சங்ககாலத்தில் மக்களிடையே உலக அமைதி பற்றிய சிந்தனைகளைப் புலவர்கள் தம் பாடல்களில் வழி உண்டாக்கினார்கள். எனவே, உலக அமைதி பற்றிய சிந்தனை பழங்காலத்திலேயே மக்களிடத்தில் இருந்தது. அதனால்தான் உலகம் என்ற பரந்த நிலப்பரப்பில் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் வாழ்க்கையினை மேற்கொண்டார்கள்.*

**முடிவுரை**

*உலகம் என்னும் சொல் தொல்காப்பியக் காலம் தொடங்கி சங்ககாலம், சங்கமருவிய காலத்திலும் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளது.*

*உலகம், நிலம், நாடு போன்ற பெயர்களில் உலகம் வழங்கப்பட்டுள்ளதைக் காணும்போது உலகச் சிந்தனை பழந்தமிழ்ப் புலவர்களிடம் இருந்துள்ளதனை அறியலாம்.*

*தமிழர்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்ததினால் பிற நாட்டு மக்களையும் அவர்கள் நேசித்து உறவாடினர். ஆகவே, வந்தாரை வாழ்விக்கின்ற தமிழகமாக, தமிழகம் அன்றும் விளங்கியது.*

*சாதி, மதம், இனம், நிறம் என்ற வேற்றுமையின்றி எல்லோர்க்கும் எல்லாம் என்ற கோட்பாட்டில் உணவு, உடை, உறையுள், கல்வி போன்றவற்றைப் பெற்றும் பலர்க்கும் பங்கீட்டுக் கொடுத்துப் பகுத்துண்ணும் முறையும் சங்கத்தமிழர்களிடம் இருந்தது. இதனால் சமுதாயம், நாடு, உலகம் என்றளவில் ஒருமைப் பாட்டுணர்வு படிப்படியாக ஓங்கி இருந்தது.*

*உலக மக்கள் அனைவரையும் ஒன்றாகக் காணும் உணர்வானது முதலில் புலவர்களிடம் அரும்பிப் பின்பு அதுவே மக்களிடம் சென்று மலர்ந்தது. இதனை, உலகத்தார், வையகமெல்லாம் என்று வருகின்ற சொற்களின் வழி உணரமுடிகின்றது.*

**துணை நூற்பட்டியல்**

1. அய்யாவு, மா. புறநானூறும் புலவர் வாழ்வும். ஜெனரல் புக் கம்பெனி, கும்பகோணம், 1956.
2. அருளப்பா, இரா. திருக்குறள் கூறும் சான்றாண்மை. மெய்ப்பொருள் பதிப்பகம், சென்னை, 1974.
3. அருளப்பா, இரா. மனித இன ஒருமைப்பாடு. மெய்ப்பொருள் பதிப்பகம், சென்னை, 1974.
4. அழகுகிஷ்ணன், பொ. சிலப்பதிகாரம் காட்டும் பண்பாடும் சமுதாய வரலாறும். ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1988.
5. இராசகோபாலன், வ. இலக்கியத்தில் ஒருமைப்பாடு. அழகு பதிப்பகம், காரைக்குடி, 1964.
6. இராமநாதன், லெ.ப.கரு. சங்க காலத் தமிழர் வாழ்வு முத்தையா நிலையம், சென்னை, 1974.
7. இலட்சுமணன், கே.எஸ். ஒருமைப்பாட்டு இயக்கங்கள். சுவாமிப் பதிப்பகம், சென்னை, 1966.
8. மோகனராசு, கு. உலக அமைதிக்குத் திருக்குறள். ஸ்டார் பிரசுரம், சென்னை, 1987
9. வித்தியானந்தன், சு. தமிழர் சால்பு. பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1985.

**References**

1. Ayyaavu, M. “Puranaanurumpulavarvaazvum.” General Book Company, Kumbakonam, 1956.
2. Arulappa, R. “Thirukkuralkuu Rumsaanraanmai” Meypporul Pathippakam, Chennai,1974.
3. Arulappa, R. “Manitha Ina Orumaippaadu ”Meypporul Pathippakam, Chennai, 1974.
4. Azhaku Krishnan, P. “Silappathikaaram Kaattum Panpaadum Samuthaya Varalaa Rum” Ainthinai Pathippakam, Chennai, 1988.
5. Rasagopaalan, V. ”Ilakkiyaththil Orumaippaadu”Azaku Pathippakam, Karaikudi, 1964.
6. Ramanathan, L.P.K. “Sanga Kaalath Thamizhar Vaazhvu.” Muthaiah Nikaiyam, Chennai, 1974
7. Lakshmanan K.S. “OrumaippaattuIyakkangkal” Suvami Pathippakam, Chennai, 1966.
8. Mokanarasu, K. “ Ulaka Amaithikku Thirukkural” Star Pirasuram, Chennai, 1987.
9. Vithiyananthan, S. Thamizhar Salbu” Paari Puthakapannai, Chennai, 1985.